**அசல் வழக்கு எண்: 61/2022**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 24th day of February 2026
வா.சா.2. கோவிந்தராஜ், த/பெ. அண்ணாமலை.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு வாதி எலத்திரியானை எனக்கு தெரியும். தாவா 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளையும் எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி எல்லம்மாள் எத்திராஜீன் மனைவி ஆவார். சுள்ளி எல்லம்மாளின் மகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எல்லம்மாள் தான் எத்திராஜீன் முதல் மனைவி என்றால் சரிதான். எல்லம்மாளுக்கு ஒரு மகன் பிறந்து அவர் 17 வயதில் இறந்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் தற்போது சுமார் 10 வருடங்களாக பெங்களூரில் குடியிருந்து வருகிறேன். அதனால் தாவா சொத்தில் யார் பயிர் செய்து வருகிறார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் ஊருக்கு வரும் போது பார்த்துள்ளேன். தாவா சொத்து எந்த சர்வே எண்களில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் நிறைய வருடங்களாகிவிட்டதால் எனக்கு தெரியாது. தாவா பிராதில் எத்தனை ஐட்டம் சொத்துக்கள் கட்டுப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது தெரியாது. இந்த வழக்கு வாதி எலத்திரியான் தாவா சொத்து தன்னுடையது என கோரி தன் அக்கா சுள்ளி மீது தாக்கல் செய்துள்ளார். எந்த ஆவணத்தின் அடிப்படையில் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதிக்கு அவரது தந்தை உயில் மூலம் எழுதி வைத்த சொத்தாகும். அந்த உயிலில் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். அந்த உயில் சுமார் 23 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்டதாகும். தேதி ஞாபகம் இல்லை. அந்த உயிலை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். அதில் பாண்டு என்பவர் சாட்சி கையெழுத்து போட்டதாக என்னிடம் தெரிவித்தார்கள். வாதி பெயரில் உள்ள உயில் பதிவு செய்யப்பட்டதா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதியின் தந்தை எத்திராஜ் உடன் பிறந்தவர்கள் 4 பேர் ஆவார்கள். அவர்கள் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. எத்திராஜ் கவுண்டரை நான் பார்த்துள்ளேன். எத்திராஜ் தனக்கு ஆண் வாரிசு வேண்டும் என்பதற்காக தனது முதல் மனைவி இறந்தபின்னர் வாதியின் தாயார் சின்னகுழந்தையம்மாளை 2வதாக திருமணம் செய்தார் என்றால் சரிதான். வாதியின் தாத்தா பெயர் எனக்கு தெரியாது. எத்திராஜ் உடன் பிறந்தவர்கள் பெயர் பெருமாள் கவுண்டர், பெரியண்ண கவுண்டர், முத்தால கவுண்டர் மற்றும் ராம கவுண்டர் என்றால் சரிதான். எத்திராஜ் கவுண்டர் தனது சகோதரர்களுடன் பாகம் செய்து அவருக்கு D–அட்டவணையில் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட சொத்து தவிர்த்து எத்திராஜ் ஒரு சொத்தை தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்றார். அவர் கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண் விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எத்திராஜ் கவுண்டர் தனிப்பட்ட முறையில் அரசாங்கத்திலோ தனியார் துறையிலோ வேலை

பார்த்தாரா என்றால் இல்லை. அவருக்கு விவசாயம் மட்டும் தான் தொழில் என்றால் சரிதான். அதனால் பாக சொத்தில் இருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு தான் எத்திராஜ் கவுண்டர் தனது பெயரில் ஒரு ஏக்கர் நிலம் வாங்கினார் என்றால் சரியல்ல. அவர் செம்மறி ஆடு வைத்திருந்தார். அதன் வருமானம் கொண்டு வாங்கியதாக கேள்விபட்டேன். எனக்கு நேரடியாக தெரியாது. உண்மையில் எத்திராஜ் கவுண்டர் தனக்கு பாகம் கிடைத்த சொத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் தனது பெயரில் நிலம் வாங்கினார் என்றும் நான் அந்த விவரம் தெரியாமல் வழக்கில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எத்திராஜ் கவுண்டர் 20.09.2004 ம் தேதி 1 ம் பிரதிவாதி பெயரில் சர்வே எண் 111/1, 111/2, 174/3 மற்றும் 175/3 ஆகிய நிலங்களில் 1 ஏக்கர் 7 செண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட சர்வே எண் சொத்துக்கள் சம்மந்தமாக வாதி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். வாதி வழக்கில் குறிப்பிட்டுள்ள 15 ஐட்ட சொத்தில் எதையாவது 1 ம் பிரதிவாதிக்கு விட்டுக்கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு அது தெரியாது. இந்த வழக்கு நிலுவையில் உள்ள போதே தாவா அயிட்ட சொத்துக்களில் 3–ஐ வாதி தானமாக கொடுத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. எத்திராஜ் கவுண்டர் பரிவர்த்தனை பத்திரம் மூலம் கிடைத்த சொத்துக்கள் எதையாவது வாதிக்கு எழுதி வைத்தாரா என்றால் இல்லை. எத்திராஜ் உயில் எழுதி வைத்த போது வாதி எலத்திரியானுக்கு சுமார் 15 வயதிருக்கும். அப்போது வாதி தனது தந்தை மற்றும் தாயுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். அப்போது எத்திராஜ் கவுண்டர் தான் நிலத்தில் பயிர் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அப்போதே அவருக்கு உடல்நிலை சரியில்லை. அவருக்கு காலில் அடிப்பட்டிருந்தது. எப்போது எங்கு சிகிச்சை எடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. உண்மையில் எத்திராஜ் கவுண்டர் தான் தனது நிலங்களில் பயிர் செய்து வந்தார் என்றும் நான் தற்போது வாதிக்கு ஆதரவாக வழக்கில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தாவாவில் உள்ள 3 ஐட்ட சொத்துக்களுக்கு தான் வழக்கில் வா.சா.ஆ.8 பட்டா தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அது தெரியாது.

**நீதிமன்ற கேள்வி** – வாதி எலத்திரியான் இந்த வழக்கில் தனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்தும் அதன் விவரங்கள் குறித்தும் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

போளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எண் 267/2016 வழக்கின் பிராது விவரம் மற்றும் அதில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு என்ன காரணத்திற்காக நிலுவையில் உள்ளது என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 4 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள விவரங்களான கிரைய

பத்திரங்கள் மற்றும் தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் ஆகியவற்றில் தேதிகள் மற்றும் விவரங்கள் எனக்கு தெரியாது. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 5ம் பத்தியில் 1, 2பிரதிவாதிகள் வாதி பயிர் செய்யும் நிலத்தில் 2020ம் வருடம் ஜீன் கடைசி வாரத்தில் அத்து மீறி நுழைந்து தகறாறு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு 1ம் பிரதிவாதி இந்த தாக்கல் செய்வதற்கு முன்னரே 26.09.2019ம் தேதி இறந்துவிட்டார் என்றால் எனக்கு அது தெரியாது. 2019ம் வருடம் இறந்த நபர் 2020ம் வருடம் தாவா சொத்தில் புகுந்து தகறாறு செய்ய வாய்ப்பில்லை என்றால் எனக்கு தெரியாது. எத்திராஜ் கவுண்டர் 20.09.2004ம் தேதி வாதி பெயரில் தான் கொடுத்த தானத்தை ரத்து செய்து பத்திரம் பதிவு செய்தார் என்றால் இல்லை. அவர் ரத்து செய்யவில்லை. அவ்வாறு ரத்து செய்த பின்னர் தான் எத்திராஜ் கவுண்டர் வா.சா.ஆ.15 மூலம் 1ம் பிரதிவாதிக்கு சொத்துக்களை கிரையமாக கொடுத்தார் என்றால் எனக்கு அது தெரியாது. அதன் பின்னர் மேற்கண்ட கிரையம் அடிப்படையில் தனக்கு கிடைத்த சொத்துக்களை 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.16ன் மூலம் தனது மகளான 2ம் பிரதிவாதிக்கு தானம் செய்துகொடுத்துவிட்டார் என்றால் எனக்கு அது தெரியாது. இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்ல செய்துள்ள வில்லங்க சான்று குறித்து எனக்கு தெரியாது. சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் சுமார் 10 பேர் முன்னிலையில் ஊர் பஞ்சாயத்தில் வாதி பிரதிவாதிகளுக்கிடையே சமாதானம் பேசப்பட்டது. தேதி ஞாபகம் இல்லை. அந்த பஞ்சாயத்தில் பேசி எந்த முடிவுக்கும் வரவில்லை. இருவரும் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தங்கள் பிரச்சனைகளை தீர்த்து கொள்வதாக தெரிவித்துவிட்டார்கள். எனக்கு இந்த வழக்கு மற்றும் சொத்து விவரங்கள் குறித்து எதுவும் தெரியாமல் கற்பனையாக வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடந்த 10 வருடங்களாக பெங்களூரில் இருப்பதால் தாவா சொத்துக்கள் குறித்து எதுவும் தெரியாது என்றும் எனது சாட்சி ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |